
சாதி ஒழிப்பே ! சமூக விடுதலை !!




# ஆதித்தமிழர் பேரவை
# AATHITHAMIZHAR PERAVAI

தமிழ்நாடு



நாள் : 24-9-2012

நாமக்கல்



<u>பத்திரிக்கை செய்தி</u>

சேரல்: செய்தி ஆசிரியர் அவர்கள்,

.................................... நாளிதழ் / தொலைக்காட்சி,

நாமக்கல்.

செய்தி ஆசிரியருக்கு,

ஆதித்தமிழர் பேரவையின் வணக்கங்கள். கீழ்க்கண்ட செய்தியினை தங்களது நாளிதழில் வெளியிட்டுதவுமாறு / தங்களது தொலைக்காட்சியில் ஒளிபரப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.

<u>விவேகானந்தா கல்லூரி மாணவி காயத்ரி மர்மப்படுகொலை வழக்கை சி.பி.சி.ஐ.டிக்கு மாற்ற ஆதித்தமிழர் பேரவை நிறுவனர் அதியமான் வேண்டுகோள்</u>

நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு விவேகானந்தா தொழில்நுட்பக் கல்லூரியில் இரண்டாம் ஆண்டு பி.டெக் படித்து வந்த அருந்ததியர் மாணவி காயத்ரி மர்மமான முறையில் படுகொலை செய்யப்பட்ட வழக்கை சி.பி.சி.ஐ.டிக்கு மாற்ற வேண்டுமென ஆதித்தமிழர் பேரவை கேட்டுக்கொள்கிறது.

முப்பது நூற்றாண்டு காலமாக, முடை நாற்றமெடுத்துப்போன சாதியச் சமூகத்தில், ஒடுக்கப்பட்ட உழைக்கும் மக்களான அருந்ததியர் மக்கள் கல்வி மறுக்கப்பட்டு வருகின்றனர். ஆனால், இந்த கல்வித் தீண்டாமையை எதிர்த்துப் போராடி விரல் விட்டு எண்ணக்கூடிய சில மாணவ மாணவிகள் மட்டுமே

சக்தி ரமா அடுக்ககம், 3-வது தளம், 'இ' 2/2ஏ, கிழக்கு லோகமான்ய வீதி,
இரத்தினசபாபதிபுரம், கோவை-641002. பேசி: 94430 - 84642, 94427 01235

மின் அஞ்சல் : adhiyamaanperavai@gmail.com
இணையதளம் : www.aathithamizharperavai.com

உயர்கல்வி பயில கல்விக்கூடங்களுக்குள் வருகின்றனர். அப்படி வருகிற மாணவ மாணவிகளும் மர்மமான முறையில் படுகொலை செய்யப்படுவதும், உயிரை மாய்த்துக் கொள்ளச் செய்வதுமான கொடூரங்கள் அரங்கேறி வருகின்றன.

அந்த வரிசையில் தான் இன்று நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோட்டில் உள்ள விவேகானந்தா தொழில் நுட்பக்கல்லூரியில் இரண்டாம் ஆண்டு பி.டெக் படித்து வந்த கிருஷ்ணகிரி மாவட்டம் காட்டேரி கிராமம் வெப்பாலம்பட்டியில் இருந்து வந்து விடுதியில் தங்கிப் படித்து வந்த அருந்ததியர் மாணவி பாலியல் வன்முறைக்குள்ளாக்கப்பட்டு படுகோரமாக கொலை செய்யப்பட்டிருக்கிறார்.

23,000 க்கும் மேற்பட்ட மாணவியர் படிக்கும் விவேகானந்தா கல்லூரியில் படிக்கும் ஒவ்வொரு மாணவியும் இன்றளவும் கல்லூரி வளாகத்துக்குள் இருக்கும் ஸ்டுடியோவில் மட்டுமே ஃபோட்டோ எடுத்துக் கொள்ள வேண்டும் என்கிற சூழ்நிலையை கல்லூரி நிர்வாகம் உருவாக்கி வைத்துள்ளது. அவ்வாறு எடுக்கிற ஒவ்வொரு மாணவியின் படமும் தாளாளர் கருணாநிதி வீட்டுக்கு கருணாநிதியின் மகன் ஸ்ரீநிதியின் பார்வைக்கு அனுப்பி வைக்கப்படுகிறது

பல்லாயிரக்கணக்கான ஏழை எளிய நடுத்தரக் குடும்பங்கள் கஷ்டப்பட்டு உழைத்துச் செலுத்தும் கல்லூரிக்கட்டணத்தில் கோடி கோடியாகக் கொள்ளையடித்து கொழுக்கும் ஸ்ரீநிதி தனக்குப் அனுப்பி வைக்கப்படும் புகைப்படங்களில் பிடித்தமான மாணவிகளைத் தேர்ந்தெடுத்து சேர்மன் கெஸ்ட் ஹவுஸுக்கு ஹாஸ்டல் வார்டன் பாமா மூலம் வரவழைத்து தானும் தனது நண்பர்களும் கூட்டாகச் சேர்ந்து கொண்டு கற்பழிப்பதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். உடன்படாத மாணவிகளை படுகொலை செய்து, தற்கொலை செய்து கொண்டதாக ஹாஸ்டல் வார்டன் பாமா மூலம் செட்டப் செய்து, அரசு மருத்துவமனையில் கொண்டு போய் போட்டு விட்டு பெற்றோர்களிடம், உனது மகள் தற்கொலை செய்து கொண்டாள். உடல் அரசு மருத்துவமனையில் கிடக்கிறது போய் எடுத்துக்கொள் என்று சொல்வனர் என்று அந்த கல்லூரியில் படிக்கிற பல மாணவிகள் தங்கள் பெயர்களை வெளியே சொல்லாமல் பேரவை தோழர்களிடமும் இணைய தளத்திலும் தெரிவிக்கின்றனர்.

இது போலவே, கடந்த 30.08.2012 அன்று வியாழக்கிழமையோடு கல்லூரிக்கு ஓணம் விடுமுறை விட்டுள்ளனர். விடுதியில் காயத்ரியின் அறையில் காயத்ரியோடு சேர்த்து 8 பேர் தங்கியிருந்துள்ளனர். வீட்டுக்கு கிளம்பிய 8 மாணவிகளில் காயத்ரியை மட்டும் மருத்துவ முகாம் இருக்கிறது என்று சொல்லி கட்டாயப்படுத்தி விடுதியில் தங்க வைத்துள்ளனர். இதுபோலவே வெவ்வேறு அறைகளில் தங்கியிருந்த மேலும் 7 மாணவிகளை தங்க வைத்துள்ளனர்.

சேர்மன் கருணாநிதியின் டிரைவர் துணையோடு, ஹாஸ்டல் வார்டன் பாமா காயத்ரியை சேர்மன் கெஸ்ட ஹவுஸுக்கு அழைத்துச் சென்றுள்ளார். அங்கு ஸ்ரீநிதி அவனது 7 நண்பர்களோடு சேர்ந்து கொண்டு காயத்ரியை வலுக்கட்டாயமாக அடித்து துன்புறுத்தி கற்பழித்துள்ளனர். தன்னைக் காப்பாற்றிக்கொள்ளும் வீராவேசமான போராட்டத்தில் பின்னந்தலையில் அடிபட்டு காயத்ரி அந்த இடத்திலேயே மரணமடைந்துள்ளார்.

மரணமடைந்த காயத்ரியின் கழுத்தில் ஒப்புக்குச் சப்பாக துப்பட்டாவைச் சுற்றி கொண்டு போய் திருச்செங்கோடு அரசு மருத்துவமனையில் ஒரு ஓரமாக வீசிவிட்டு காயத்ரியின் பெற்றோருக்குச் சொல்லாமல் உறவினரிடம் காயத்ரி தற்கொலை செய்து விட்டதாகவும் உடல் அரசு மருத்துவமனையில் கிடப்பதாகவும் தகவல் சொல்லியுள்ளனர் என்று காய்த்ரியின் பெற்றோரை நேரில் சந்தித்து விசாரித்த போது சொல்கின்றனர்.

வழக்கை தற்சமயம் விசாரித்து வரும் காவல்துறையும் கல்லூரி நிர்வாகத்தின் பணவலைக்குள் சிக்கிக்கொண்டு தற்கொலை என்றே சாதிக்கிறது.

காயத்ரியின் மரணம் தற்கொலைதான் என்றால், காவல்துறைக்கு தகவல் சொல்லாதது ஏன்? காவல்துறை வருகிற வரை பிணத்தை அதே இடத்தில் வைத்திருக்காதது ஏன்?

கல்லூரி நிர்வாகம் கொடுத்த தகவலின் பேரில் அங்கு வந்ததாகச் சொல்லும் காவல்துறை ஆய்வாளர் ஈஸ்வரமூர்த்தி அதன்படி வழக்குப் பதிவு செய்யாமல், ஏன் காயத்ரியின் அப்பா வெற்றிவேல் வரும்வரை காத்திருந்தார்?

தூக்குப்போட்டு தற்கொலை செய்திருந்தால், நாக்கு வெளியே தள்ளி கண்கள் மேலே போயிருக்குமே? அவ்வாறான அடையாளங்கள் இல்லாதது ஏன்?

காயத்ரியின் உடலில் நகக்கீறல்களும், தொடையில் கன்றிப்போன காயங்களும், இருந்தது ஏன்?

காயத்ரி உடல் வீசப்பட்டுக்கிடந்த இடத்தில் ரத்தம் தேங்கியிருந்தது ஏன்?

சுடிதார் பேண்ட் கிழிந்திருந்தது ஏன்?

இந்த அடையாளங்கள் எல்லாம் முதல் தகவல் அறிக்கையிலோ, பிரேத விசாரணை அறிக்கையிலோ, பிரேத பரிசோதனை அறிக்கையிலோ குறிக்கப்படாதது ஏன்?

தற்கொலைதான் என்றால், கல்லூரி நிர்வாகம் சார்பில் ஒருவர் கூட காயத்ரி வீட்டுக்கு ஆறுதல் சொல்ல வராததன் காரணம் என்ன?

இது போன்ற கேள்விகளோடு விசாரணையைத் தொடங்கினால்தானே காயத்ரி சாவுக்கு காரணமானவர்களைக் கண்டுபிடிக்க முடியும்? ஆனால், ஒரு நேர்மையான, மனச்சாய்வற்ற, உண்மையைக் கண்டறியும் நோக்கம் கொண்ட வெளிப்படையான, புலன் விசாரணையை காவல்துறை மேற்கொள்ள மறுக்கிறது.

எனவே, இந்த வழக்கின் உண்மைகளை வெளிக்கொண்டுவர புலன்விசாரணையை சி.பி.சி.ஐ.டி வசம் ஒப்படைக்க வேண்டுமாய் தமிழக அரசை ஆதித்தமிழர் பேரவை கேட்டுக்கொள்கிறது.

ஒடுக்கப்பட்டோர் விடுதலைப் பணியில்

(இரா.அதியமான்)

நிறுவனர்.